S.T.C No. 596/2023 23.06.2026

PW 1 ராணி, த/பெ.மலைராஜன்

**( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

எதிரியிடமிருந்து இடம் வாங்கி தருவதாக சொல்லி பணம் பெற்று மோசடி செய்ததாக மேலூர் காவல் நிலையத்தில் எதிரி என் மீது புகார் கொடுத்துள்ளார் என்றால் இவ்வழக்கு தாக்கல் செய்த பின்னர் எதிரி என் மீது புகார் கொடுத்துள்ளார். எதிரி மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் உத்தரவு பெற்று அதன் அடிப்படையில் காவல் நிலையத்திலிருந்து என்னை விசாரிக்க அழைப்பாணை அனுப்பியும், நான் விசாரணைக்கு ஆஜர் ஆகவில்லை என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் விசாரணைக்கு ஆஜர் ஆனது சம்மந்தமாக ஆவணம் எதுவும் எழுதிக்கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். புகார் மனுவில் எனது கணவர் தற்போது அந்தமானில் வேலை செய்வதாக சொல்லியுள்ளேன், ஆனால் எனது கணவர் தற்போது அந்தமானில் வேலை செய்யவில்லை என்றால் எனது கணவர் 2021 வரை அந்தமானில் வேலை செய்தார், தற்போது வெளிநாட்டில் வேலை செய்கிறார். எதிரி என் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தனால் அவரை மிரட்டும் நோக்கத்தில் அவர் கொடுத்த ஆவணங்களை தவறான முறையில் பயன்படுத்தி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, நான் இவ்வழக்கு தாக்கல் செய்த பின்னர்தான் என் மீது எதிரி பொய்யான புகார் கொடுத்துள்ளார்.

2) இவ்வழக்கு காசோலை எதிரி என்னிடம் இடம் பதிவு செய்வதற்காக கொடுத்த காசோலை அதை பயன்படுத்தி பொய்யாக வழக்கு

தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, எனக்கு கொடுக்க வேண்டிய பணத்திற்காக கொடுத்த காசோலை. புகார் மனுவில் சொன்னதுபோல் எதிரி என்னிடம் பணம் எதுவும் வாங்கவில்லை, நான் கடன் எதுவும் கொடுக்கவும் இல்லை, பொய்யான விவரங்களை சொல்லி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கானது பொய்யான சங்கதிகள் கொண்டு ஜோடிக்கப்பட்ட வழக்கு என்பதனால் சட்டப்படி செல்லாது, தள்ளுபடி செய்யகூடிய வழக்கு என்றால் சரியல்ல.